# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1891/26 - 2014 දෙසැම්බර් මස 03 වැනි බදාදා - 2014.12.03

*1891/26 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 203/33* (vii).

**காடு பேணற் கட்டளைச் சட்டம்**

(451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டத்தின் 23அ, 23ஆ, 23இ, 23ஈ மற்றும் 28(3) என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 64 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு சூழல் மற்றும் புதுப்பிக்கப்படத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சுசில் பிரேமஜயந்த,<br>சூழல் மற்றும் புதுப்பிக்கப்படத்தக்க சக்தி அமைச்சர்.

பத்தரமுல்லை,<br>2014, நவெம்பர் 26.

ஒழுங்குவிதிகள்

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காடு பேணல் (வெட்டுமரச்சாலைகளையும் ஆதனக் குறிகளையும் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2014.12.08 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இலங்கையின் எல்லா நிர்வாக மாவட்டங்களினுள்ளும் ஏற்புடையனவாதம் வேண்டும்.

2. கட்டளைச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் நியதிகளின்படி வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான பதிவுச் சான்றிதழ் ஒன்றுக்காக கட்டளைச்சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்திலிருத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 26 ஆந் திகதிய 68/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காட்டு ஒழுங்குவிதியின் கீழ், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் பெறப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றின் பயனைக்கொண்டு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் கீழான பதிவுச் சான்றிதழொன்றைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது என்பதுடன், அவ்வாறு பெறப்பட்ட பதிவுச் சான்றிதழ் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்டவொரு பதிவுச் சான்றிதழாகக் கருதப்படுதலும் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இன் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றதும், 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான விண்ணப்பமொன்று, அத்தகைய வெட்டுமரச்சாலை, அதன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்டவாறு ஓர் அரச காட்டுக்கான அல்லது ஒரு காட்டுப் பகுதிக்கான ஆகக்குறைந்த வான்வழித் தூரத்தினுள் அமைந்திருப்பின், மறுக்கப்படுதல் வேண்டும்.

4. (1) காடு பேணுநர் தலைமையதிபதி, வெட்டுமரச்சாலையொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான பதிவுச்சான்றிதழொன்றை வழங்குவதன் மீது, எவ்வாளுக்குப் பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்டதோ அவ்வாளுக்கு வெட்டுமரத் தொழிலில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கின்ற அனுமதிப்பத்திரமொன்றையும் வழங்குதல் வேண்டும். அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பமானது பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) பதிவுச் சான்றிதழும் அனுமதிப்பத்திரமும் முறையே இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணைகள் IV மற்றும் V இல் தரப்பட்டுள்ள அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும். முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலன்றி, பதிவுச்சான்றிதழானது வெட்டுமரச்சாலைத் தொழில் தொழிற்பாட்டிலிருக்கும் வரை செல்லுபடியுடையதாதல் வேண்டுமென்பதுடன், அனுமதிப்பத்திரமானது சொல்லப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குச் செல்லுபடியாதலும் வேண்டும்.

5. (1) இவ்வொழுங்குவிதிகளுக்கான VI ஆம் அட்டவணையின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட பதிவுக்கான கட்டணம், அவ்வட்டவணையின் நிரை I இலுள்ளநேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட தொழிற் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான பதிவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்காகக் காடுபேணல் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இன் நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட வருடாந்தக் கட்டணம் அனுமதிப்பத்திரமொன்றில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அவ்வட்டவணையின் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட தொழிற் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கென அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காகக் காடு பேணல் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருமுன்னர், 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 26 ஆந் திகதிய 68/14 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காட்டு ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நடப்பாண்டுக்குச் செல்லுபடியாகவுள்ள அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனுமாள் நடப்பாண்டுக்கான வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

6. வெட்டுமரச்சாலையின் உரிமையாளர் அத்தகைய வெட்டுமரச்சாலை தொடர்பில் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வெட்டுமரச்சாலையில் துலாம்பரமான ஓர் இடத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

7. (1) வெட்டுமரச்சாலையொன்று கட்டளைச் சட்டத்தின் 23 ஆ என்னும் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுமிடத்து, காடுபேணல் தலைமையதிபதி, அவ் வெட்டுமரச்சாலைக்குத் தனித்துவமானதாகவுள்ள ஆதனக் குறியொன்றைக் குறித்தளித்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஆதனக் குறியில் பயன்படுத்தப்படவேண்டிய அளவும், வடிவமும், தனிவேறான எண்ணும் எழுத்தும், நிர்வாக மாவட்டத்தையும் வேறு ஒத்த தேவைப்பாடுகளையும் கவனத்திற்கொண்டு, குறிப்பிட்டவொரு வெட்டு மரச்சாலையைப் பதிவு செய்யும் நேரத்தில் காடுபேணல் தலைமையதிபதி தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய பரிமாணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆதனக் குறியைத் தீர்மானித்ததன் மேல், காடுபேணல் தலைமையதிபதி, கொடுக்கப்பட்ட பரிமாணத்தைக் கொண்ட ஆதனக் குறியானது வெட்டுமரச்சாலை உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதென அவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரிமையாளர் ஆதனக் குறியை உலோகத்தினால் தயாரித்துப், பதிக்கப்படுவதற்கு இயன்றதகாவுள்ளதெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய முறையில் அதனை ஒரு வெட்டுமரத்துண்டில் பொறித்தலும் வேண்டும்.

(4) வெட்டுமரச்சாலையின் உரிமையாளர், அதன் பின்னர், ஒவ்வொரு பக்கத்திலும் இருபது (20) சென்றி மீற்றர் நீளத்தைக் கொண்ட சதுரமாகவுள்ள கடுதாசித்தாளில் ஆதனக் குறியைப் பதித்தல் வேண்டும். அவர், தமது பெயரையும், திகதியையும், கையொப்பத்தையும் அதிலிட்டு, அத்தகைய குறியானது அவருக்கு வழங்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், அவரது வெட்டு மரச்சாலை எந்தப் பிரதேசக் காட்டு அலுவலரின் இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்தப் பிரதேசக் காட்டு அலுவலருக்கு அதனை அனுப்பி வைத்தலும் வேண்டும்.

8. அத்தகைய வெட்டுமரச்சாலையிலிருந்து விற்பனை செய்யப்பட்ட வெட்டுமரமுட்பட ஒரு வெட்டு மரச்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட எல்லா மரக்குற்றிகளும் அரியப்பட்ட வெட்டுமரமும், முறையான வெட்டுமரச்சாலைக்கு வழங்கப்பட்ட ஆதனக் குறியினால் இலச்சினையிடப்படுதல் வேண்டும்.

9. (1) ஒவ்வொரு நாளுக்குமான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய பதிவேட்டைக் கொண்டுள்ள பின்வரும் இடாப்புக்கள், வெட்டுமரச்சாலை உரிமையாளரினால் பேணப்படுதல் வேண்டும் :-

(அ) வெட்டுமரக் குற்றிகள் தொடர்பாக பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VII இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான இடாப்பொன்று ; அத்துடன்

(ஆ) அரியப்பட்ட வெட்டுமரம் தொடர்பாகப் பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VIII இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான இடாப்பொன்று .

(2) ஒரு வெட்டுமரச்சாலையில் பேணப்பட்ட இடாப்புக்களில் தோன்றுகின்றவாறான வெட்டுமரக் கையிருப்பு எல்லா நேரங்களிலும் வெட்டுமரச்சாலையிலுள்ள உருப்படியான வெட்டுமரக் கையிருப்பை ஒத்திருத்தல் வேண்டும்.

10. கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு வெட்டுமரச்சாலைகளைச் சோதனையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், ஏதேனும் வெட்டுமரச்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட மரக்குற்றிகளையும் அரியப்பட்ட வெட்டுமரத்தையும் அத்தகைய வெட்டுமரச்சாலையின் கொடுக்கல்வாங்கல் பற்றிய பதிவேடுகளையும் சோதனையிடும் நோக்கத்துக்காக ஏதேனும் நியாயமான நேரத்தில் அதனுட் பிரவேசிக்கலாம். காட்டு அலுவலரினால் வெட்டுமரச்சாலை சோதனையிடப்படுவதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக அவரினால் பேணப்பட்ட எல்லா வெட்டுமரங்களையும், இடாப்புக்களையும், பதிவேடுகளையும் எவரேனும் அதிகாரமளிக்கப்படட அலுவலருக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதலும், அவரிடமிருந்து தேவைப்படுத்தப்படக்கூடியவாறான எல்லா உதவிகளையும் அளித்தலும் வெட்டுமரச்சாலை உரிமையாளரின் கடமையாதல் வேண்டும்.

11. பத்தாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆலுவலரொருவரினால் ஏதேனும் வெட்டுமரச்சாலை தொடர்பிலான சோதனையொன்று நிறைவேற்றப்படுமிடத்து, களஞ்சியப்படுத்தப்பட்ட எல்லா வெட்டுமரங்களும் சட்டப்படி அவரது உடமையிலும் கட்டுப்பாட்டிலும் இருந்ததென எண்பித்தல் அதன் உரிமையாளரின் கடமையாதல் வேண்டும்.

12. (1) (அ) வெட்டுமரச்சாலை தொடர்பில் காடு பேணல் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் வேறு ஆளுக்குக் கைமாற்றப்படுதலானது, பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் மற்றும் உரிமையாளராக வரவிருப்பவர் ஆகிய இருவரும் காடு பேணல் தலைமையதிபதிக்கு அல்லது அதற்கென காடு பேணல் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு ஒரு வேண்டுகோளை முன்வைப்பதன் மீது மாத்திரமே கைமாற்றப்படற்பாலதாதல் வேண்டும் ;

(ஆ) காடு பேணல் தலைமையதிபதி அல்லது அதற்கெனக் காடு பேணல் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், வெட்டுமரச்சாலையின் பதிவை உரிமையாளராக வரவிருப்பின் பெயருக்குக் கைமாற்றுவதனை அங்கீகரிக்குமிடத்து முன்னைய சான்றிதழ் உடனடியாக இல்லாதொழிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பதிவுச் சான்றிதழொன்றும் வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு புதிய உரிமையாளரை இயலச் செய்கின்ற அனுமதிப்பத்திரமொன்றும், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அவருக்கு வழங்கப்படுதலும் வேண்டும் ;

(இ) உரிமையாளராக வரவிருப்பவர், அத்தகைய பதிவுச் சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திரம் தொடர்பில் இதற்கான அட்டவணை VI இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் பந்தியின் நியதிகளின்படி பதிவின் கைமாற்றத்திற்கான ஒவ்வொரு வேண்டுகோளும் பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் உரிமையாளராக வரவிருப்பவரின் விண்ணப்பத்துடனும், புதிய உரிமையாளர் இடாப்பிலுள்ள பதிவுகளுடன் வெட்டுமரச்சாலைகளிலுள்ள மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்ட வெட்டுமரக் கையிருப்புக்களைத் தாமே சரிபார்த்துள்ளாரென்ற கூற்றுடனும் சேர்த்துனுப்பப்படுதல் வேண்டும் ;

(ஆ) இடாப்பிலுள்ள எண்கள் வெட்டுமரச்சாலையிலுள்ள கையிருப்புடன் ஒத்ததாக இராத விடயத்தில், இயைபான வேண்டுகோளுடன் சேர்த்து மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்ட வெட்டு மரத்தின் ஒவ்வாமைகளுக்கான காரணங்களை எடுத்துக்காட்டுகின்ற கூற்றொன்றை காடு பேணல் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

13. எந்த வெட்டுமரச்சாலையின் பதிவு கட்டளைச் சட்டத்தின் 23 இ என்னும் பிரிவின் நியதிகளின்படி இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த வெட்டுமரச்சாலையின் உரிமையாளர், காடு பேணல் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன், அத்தகைய இல்லாதாக்குகைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அவரது முழு வியாபாரக் கையிருப்பையும் வேறேதேனும் பதிவு செய்யப்பட்ட வெட்டுமரச்சாலையின் உரிமையாளருக்கு அல்லலு காடு பேணல் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு அவரது சொந்தப் பாவனைக்காக விற்பனை செய்துல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். காடு பேணல் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அத்தகைய ஏதேனும் வெட்டுமரக் கையிருப்பை இடம்பெயர்ப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

14. (1) வெட்டுமரச்சாலைத் தொழிலை நாடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், நடப்பு அனுமதிப்பத்திரம் முடிவுறுவதற்குக் குறைந்தபட்சம் ஒரு மாதத்துக்கு முன்னரேனும் காடு பேணல் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இல் குறித்துரைக்கப்பட்ட வருடாந்தக் கட்டணம், ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் புதுப்பித்தற்காகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) உரிமையாளர் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் புதுப்பிப்பதற்கான விண்ணபப்பத்தைச் சமர்ப்பிக்கத் தவறுவாராயின், அனுமதிப்பத்திரம் முடிவுற்றதன் பின்னர் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிப்பதற்கு அவர் அவ்வாறு தாமதித்த ஒவ்வொரு மாதத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் மிகைக்கட்டணமாக, விதித்துரைக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் பத்து சதவீதத்தைக் காடு பேணல் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும். செல்லுபடியான காரணமின்றி, ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கத் தவறுதல், பதிவுச் சான்றிதழை இல்லாதாக்கப்படச் செய்தல் வேண்டும்.

15. (1) வெட்டுமரச்சாலையின் எந்தப் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் பதிவும் அனுமதிப்பத்திரமும் இடைநிறுத்தப்பட்டுள்ளனவோ அந்தப் பதிவு செய்யப்பட்ட வெட்டுமரச்சாலையின் உரிமையாளர், அத்தகைய இடைநிறுத்தல் காலப்பகுதி முடிவுற்றபின்னர் வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்குக் கருதுமிடத்து, இடைநிறுத்தல் காலப்பகுதி முடிவுறும் திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர், அவர், புதிய பதிவுச்சான்றிதழுக்காகவும் அனுமதிப்பத்திரத்துக்காகவும் விண்ணப்பித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவர் அவ்வாறு செய்யத் தாமதிப்பின், பதிவுச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) ஓராம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறு தாமதமொன்று இருந்துள்ளவிடத்து, பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வழங்க மறுக்கின்றமை பற்றிக் காடு பேணல் தலைமையதிபதி எழுத்தில் பதிவுத் தபால் மூலம் உரிமையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) அறிவித்தலைப் பெற்றதன் மேல் வெட்டுமரச்சாலை உரிமையாளர், அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் காடு பேணல் தலைமையதிபதிக்குப் பதிவுத் தபால் மூலம் மேன்முறையீடு செய்யலாம்.

(4) ஓராம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் வெட்டுமரச்சாலை உரிமையாளரினால் போதியதும், நியாயப்படுத்தக்கூடியதுமான காரணங்கள் கொடுக்கப்பட்டிராதுவிட்டால், காடு பேணல் தலைமையதிபதி, வெட்டுமரச் சாலையின் பதிவையும் அனுமதிப்பத்திரத்தின் வழங்குகையையும் மறுக்கின்றமையை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், வெட்டுமரச் சாலை உரிமையாளருக்கு அது பற்றிப் பதிவுத் தபால் மூலம் அறிவித்தலும் வேண்டும்.

16 (1) ஒரு வெட்டுமரச்சாலை உரிமையாளர், குறித்துரைக்கப்பட்டவொரு காலத்துக்குத் தமது வெட்டுமரச்சாலையை மூடுவதற்குக் கருதினால், மூடுவதற்கு கருதப்பட்ட திகதிக்கு முன்னர் குறைந்தபட்சம் முப்பது நாட்காலப்பகுதியினுள் தமது கருத்தை எழுத்தில் அவர் காடுபேணல் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். காடுபேணல் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு வெட்டுமரச்சாலையின் மூடுகை பற்றிய அறிவித்தல் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை IX இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், வழங்கப்பட்ட திகதியிலிருந்து அதிகபட்சம் இரண்டாண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாக இருத்தலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் நியதிகளின்படி தமது வெட்டுமரச்சாலையை மூடியுள்ள வெட்டுமரச்சாலை உரிமையாளரொருவர் மீண்டும் வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்கு விரும்புமிடத்து, அவர், அத்தகைய நோக்கத்துக்காக அவருக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் புதுப்பித்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அக்குறிப்பிட்ட வெட்டுமரச்சாலையின் பதிவு, அது மூடப்பட்டதிலிருந்து இரண்டாண்டுக்குக் காலப்பகுதிக்குப் பின்னர் புதுப்பிக்கப்படுதலாகாது என்பதுடன், உரிமையாளர் தமது வெட்டுமரச்சாலயை மீளத் திறப்பதற்கு விரும்பினால் இற்கான 3 ஆம், 4 ஆம் ஒழுங்குவிதிகளுக்கிணங்க அவர் செயலாற்றுதலும் வேண்டும் ; அத்துடன் புதிய விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் புதிய பதிவுச் சான்றிதழொன்றை அவர் பெறுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வெட்டுமரச்சாலை உரிமையாளர், வெட்டுமரச்சாலையின் கருதப்பட்ட மூடுகை பற்றி அறிவித்து அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றுடன் சேர்த்து, அதனை மீளத் திறக்கும் திகதிக்குக் குறைந்தபட்சம் முப்பது நாட்களுக்கு முன்னரேனும் காடு பேணல் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். முறையான நுண்ணாய்வொன்றை நிறைவேற்றிய பின்னர் காடு பேணல் தலைமையதிபதி, வேண்டுகோள் பெறப்பட்ட திகதியிலிருந்து வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்கென இயைபான பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வழங்கலாம்.

(4) மூன்றாம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான புதிய பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வழங்குவதன் மீது வெட்டுமரச்சாலை மூடப்பட்ட காலப்பகுதிக்கான நிலுவைகள், பதிவுக் கட்டணங்கள் எவையும் அல்லது ஏதேனும் மிகைக்கட்டணம் அறவிடப்படுதலாகாது.

17. ஒழுங்குவிதிகள் 3, 6, 9, 10 மற்றும் 11 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வரும் ஏற்பாடுகள் நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(அ) ஒவ்வொரு நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையும், கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் இணங்க, அத்தகைய நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்தத் தனியார் காணியின் மீது அமைந்துள்ளதோ அந்தத் தனியார் காணியினுள், வெட்டி வீழ்த்தப்பட்ட வெட்டுமரத்தை அரியும் நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையைப் பயன்படுத்தி வெட்டு மரத்தை அரிவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அரிதற் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு முன்னர், நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்த இடப்பரப்பினுள் தொழிற்படுத்தப்படுகின்றதோ அந்த இடப்பரப்பின் பரப்பெல்லைக் காட்டு அலுவலரிடமிருந்து அல்லது பிரதேசச் செயலாளரிடமிருந்து வெட்டுமரம் ஒரு தனியார் காணியிலிருந்து பெறப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழொன்றைப் பெறுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் (452 ஆம் அத்தியாயமான) மரங்களை வெட்டி வீழ்த்தல் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கிழ் மரங்களை வெட்டி வீழ்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெட்டி வீழ்த்தல் அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கும் எவரேனுமாள், இவ்வொழுங்குவிதியின் கீழான சான்றிதழொன்றைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது ;

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழ், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை X இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும் ;

(ஈ) அரிதல் நிறைவேற்றப்படும் போது, இயக்குநர், அரிவு ஆலைக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழையும் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும். ;

(உ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்தக் கையுழவுயந்திரத்திற்கு அல்லது இழுவையிணைப்பு வண்டிக்குப் பொறுத்தப்பட்டுள்ளதோ அந்தக் கையுழவுயந்திரம் அல்லது இழுவையிணைப்பு வண்டி மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியுடன் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், நடப்பாண்டு தொடர்பில் வாகன அரசிறை உரிமமொன்றை உடையதாகவிருத்தலும் வேண்டும். அரிதல் நிறைவேற்றப்படும் போது சொல்லப்பட்ட உரிமம் எல்லா நேரங்களிலும் பொறி இயக்குநரின் உடைமையில் இருத்தல் வேண்டும் ;

(ஊ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் பதிவு, விண்ணப்பக்காரர் நிரந்தரமாக வதிகின்ற பிரதேச செயலாளர் பிரிவினுள் மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும் ;

(எ) விண்ணப்பகாரர், நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்தக் கையுழவுயந்திரத்துக்குப் பொருத்தப்பட்டுள்ளதோ அந்தக் கையுழவுயந்திரத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராகவிருத்தல் வேண்டும் ;

(ஏ) ஓர் அரச காட்டிலிருந்து அல்லது காட்டுப் பகுதியிலிருந்து அரிதல் நிறைவேற்றப்படும் காணிக்கான குறைந்தபட்ச வான்வழித்தூரம் 200 மீற்றர்களுக்குக் குறையவிருத்தலாகாது ;

(ஐ) அனுமதிப்பதிரத்தின் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்கும் போது, கையுழவுயந்திரத்தின் வருடாந்த வாகன அரசிறை உரிமம் சமர்பிக்கப்படுதல் வேண்டும் ;

(ஒ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையொன்று, பதிவுச் சான்றிதழிற் குறிப்பிடப்பட்ட கையுழவுயந்திரம் அல்லது இழுவையிணைப்பு வண்டி தவிர்ந்த வேறு ஏதேனும் வாகனத்தில் அல்லது பொறியில் பொருத்தப்படுதலாகாது;

(ஓ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலைக்குப் பயன்படுத்தப்படும் ஈர்வாளின் வெட்டுவாய்ப்பகுதி, விட்டத்தில் 75 சென்றி மீற்றர்களுக்கு (30 அங்குலங்கள்) குறைவாகவிருத்தல் வேண்டும் ;

(ஔ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையொன்று ஒவ்வொரு நாளிலும் மு.ப. 6.00 மணியிலிருந்து பி.ப. 6.00 மணிவரை மட்டுமே தொழிற்படுத்தப்படுதல் வேண்டும் ;

(க) கட்டளைச்சட்டத்தின் ஏற்பாட்டின் பயனைக்கொண்டு வெட்டுமரச்சாலைகளைச் சோதனையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் ஏதேனும் நடமாடும் வெட்டுமர அரிவாலை தொழிற்படுத்தப்படும் போது எந்நேரத்திலும் அந்த அரிவு ஆலையைச் சோதனையிடலாமென்பதுடன், அதற்குத் தேவைப்பட்ட எல்லா உதவிகளையும் அளித்தல், நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எக்காணியில் தொழிற்படுத்தப்படுகின்றதோ அக்காணி உரிமையாளரினதும் கடமையாதலும் வேண்டும்.

18. இவ்வொழுங்குவிதிகளில்–

"பதிவுச்சான்றிதழ்" என்பது, ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துதற்குக் கட்டளைச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் கீழ் பெறப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஒரு பதிவுச் சான்றிதழ் என்று பொருளாகும் ;

"காடுபேணுநர் தலைமையதிபதி" என்பது, கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட காடுபேணல் தலைமையதிபதி என்று பொருளாகும் ;

"நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை" என்பது நிலத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்படாது கையுழவுயந்திரத்தின் மீது ஏற்றப்பட்டதும் மற்றும் வெட்டுமரத்தை அரிவதற்காகப் பயன்படுத்தப்படுவதுமான ஓர் அரிவு ஆலை என்று பொருளாகும் ;

"கட்டளைச்சட்டம்" என்பது, (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம் என்று பொருளாகும் ;

"வெட்டுமரச் சாலை உரிமையாளர்" என்பது, வெட்டுமரச் சாலையை நிர்வகிக்கும் முகவரொருவரை அல்லது எவரேனும் ஊழியரை உள்ளடக்கும் ;

"அனுமதிப்பத்திரம்" என்பது, ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குக் கட்டளைச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் கீழ் பெறப்படுதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும் ;

"வெட்டுமரச் சாலை" என்பது கட்டளைச்சட்டத்தின் கீழ் அச்சொல்லமைப்பிற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்..

19. 1986 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 429/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறானவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 68/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காட்டு ஒழுங்குவிதிகளும் மற்றும் 28 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிய 80/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலும், அவற்றின் கீழ்ச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதிகள் 2 மற்றும் 12)

(451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச் சட்டம்

**வெட்டுமரச் சாலையொன்றினைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் (பிரிவு 23ஆ)**

**காடு பேணல் திணைக்களம்**

1. விண்ணப்பகாரரியின் முழுப்பெயர் : ..........................................................
நிரந்தர முகவரி :..........................................................
தேசிய அடையாள அட்டை இல. :..........................................................
(விண்ணப்பக்காரர் ஒரு கம்பெனியாகவிருப்பின் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

2. வெட்டுமரச் சாலை அமைந்துள்ள அல்லது அமையவுள்ள இடத்தின் முகவரி :..........................................................
..........................................................
காணியின் பெயர் :..........................................................
காணியின் உரிமையாளர் :..........................................................
(உரிமையாண்மைக்கான ஆவண எண்பிப்பைச் சமர்ப்பிக்கவும்)

3. வெட்டுமரச் சாலையின் பெயர் :..........................................................
4. வெட்டுமரச் சாலையின் தன்மை :..........................................................
வெட்டுமரச் சாலைத் தொழிலின் தன்மையின் வகுதியைச் சுட்டிக்காட்டி இயைபான கூட்டிற்குள் (✓ ) என்று குறியிடவும்.

(அ) அரிவு ஆலை ; ☐

(i) அரிவு ஆலை (அரிவதற்காக மட்டும்) ☐

(ii) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை (அரிவதற்காக மட்டும்)

(ஆ) வெட்டு மர விற்பனை நிலையம் ☐
(வெட்டுமரங்களின் விற்பனை மட்டும் மற்றும் பொறிகளைப் பயன்படுத்த முடியாது)

(இ) வெட்டுமரத்தைப் பக்குவப்படுத்தும் அல்லது பதனிடும் தொழிற்சாலை ☐
(மரக்குற்றிகளை அரிதல் மற்றும் வெட்டு மரத்தை விற்பனை செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது)

(ஈ) தச்சு வேலைக்காலை ☐
(மரக்குற்றிகளைக் களஞ்சிப்படுத்தல் மற்றும் வெட்டுமரத்தை விற்பனை செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது)

(உ) வெட்டுமரத் தளபாடக் கடை
(செய்து முடித்த தளபாடங்களின் விற்பனை மட்டும் பொறிகளைப் பயன்படுத்தல் அனுமதிக்கப்படமாட்டாது)

(ஊ) விறகுக்காலை
வெட்டுமரச்சாலையின் அமைவிடத்தின் விவரணம் :

(i) மாவட்டம் :............................................................ (ii) பிரதேச செயலாளர் பிரிவு :..................................
(iii) கிராம அலுவலர் பிரிவு ..................................... (iv) உள்ளூராட்சிப் பிரதேசம் :..................................

6. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில் ;

(i) கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம் :..................................................................................
(ii) இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம் :...............................................................

(பதிவுச்சான்றிதழ்கள் மற்றும் அரசிறை உரிமத்தின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

7. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையைப் பயன்படுத்தவுள்ள பிரதேச செயலாளர் பிரிவு :................................................
..........................................................................................................................................................................

8. தொழில் ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள திகதி :...................................................................................
9. சூழல் பாதுகாப்பு உரிமத்தின் செல்லுபடிக் காலப்பகுதி :..........................................................................................
(பிரதியை இணைக்கவும்)

இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்திற்கும் மற்றும் காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க வெட்டுமரச் சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இத்தால் உடன்படுகின்றேன்.

............................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :......................

பி. குறிப்பு : இவ்விண்ணப்பத்தை மூன்று பிரதிகளில் இடப்பரப்பின் பிரதேசக் காட்டு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஹங்வெல்ல மற்றும் பாதுக்க செயலாளர் இடப்பரப்புக்கள் தவிர்ந்த கொழும்பு மாவட்டத்தின் விண்ணப்பங்கள் பிராந்திய பிரதிக் காடு பேணல், இல. 60, அக்குரகொட வீதி, பெலவத்த, தலங்கம தெற்கு என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். ஹங்வெல மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்களின் விண்ணப்பங்கள் களுத்துறையிலுள்ள பிரதேசக் காட்டு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3)

| நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|
| வெட்டுமரச்சாலையின் தன்மை | அரசுக்குரிய காட்டிலிருந்து வெட்டுமரச்சாலைக்கான வான் வழித்தூரம் 40 ஹெக்டேயார்களுக்குக் குறையாமலும்/ காட்டுப்பகுதியிலிருந்து 20 ஹெக்டேயார்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். | | |
| | மாநகர சபை எல்லைகளினுள் (கி. மீற்றர்களில்) | நகர சபை எல்லைகளினுள் (கி. மீற்றர்களில்) | பிரதேச சபை எல்லைகளினுள் (கி. மீற்றர்களில்) |
| 1. அரிவாலைகள் | 1 | 1 | 2 |
| 2. வெட்டுமர விற்பனை நிலையங்கள் | 0.5 | 0.5 | 1 |
| 3. வெட்டுமரத்தைப் பக்குவப் படுத்தும் அல்லது பதனிடும் தொழிற்சாலை | 0.5 | 0.5 | 1 |
| 4. தச்சுவேலைக் காலைகள் | 0.5 | 0.5 | 1 |
| 5. வெட்டுமரத்தளபாடக்கடைகள் | | தூர எல்லை ஏற்புடையதல்ல | |
| 6. விறகுக் காலைகள் | 0.5 | 0.5 | 0.5 |

## அட்டவணை III

(ஒழுங்குவிதிகள் 4 மற்றும் 14)

(451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச் சட்டம்

வெட்டுமரச் சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம்
(பிரிவு 23ஆ)

காடு பேணல் திணைக்களம்

1. வெட்டுமரச் சாலை உரிமையாளரின் முழுப்பெயர் : ..........................................................................................
நிரந்தர முகவரி :..............................................................................................................................................
தேசிய அடையாள அட்டை இல. :.......................................................................................................................
(விண்ணப்பக்கார ஒரு கம்பெனியாகவிருப்பின் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

2. வெட்டுமரச் சாலையின் முகவரி :...............................................................

3. வெட்டுமரச் சாலையின் பெயர் :............................................................................................................................

4. (அ) வெட்டுமரச் சாலையின் பதிவில .:.......................................................................................................................
(ஆ) முதலாவது பதிவின் திகதி :..............................................................................................................................

5. வெட்டுமரச் சாலையின் தன்மை :.............................................................................................................................

6. கடைசியாகப் பெறப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதி :...................................................................
(கடைசி அனுமதிபத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

7. புதிய அனுமதிப்பத்திரத்திரம் எக்காலப்பகுதிக்குக் கோரப்படுகின்றது :..........................................................................

8. நடமாடும் அரிவு ஆலையின் விடயத்தில் :

   (i) கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம் :.......................................................................................

   (ii) இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம் :......................................................................

   (iii) அரசிறை உரிமத்தின் செல்லுபடிக் காலப்பகுதி :.....................................................................
   (அரசிறை உரிமத்தின் பிரதியை இணைக்கவும்)

9. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படவுள்ள பிரதேச செயலாளர் பிரிவு :................................

10. வெட்டுமரச் சாலை தொடர்பான கூட்டுத் தவறுகள், எவையேனுமிருப்பின் அவை பற்றிய விபரங்கள்:
.................................................................................................................................................

11. சூழல் பாதுகாப்பு உரிமத்தின் செல்லுபடிக் காலப்பகுதி :.......................................................................
(பிரதி ஒன்றை இணைக்கவும்).

இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்திற்கும் (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க வெட்டுமரச் சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இத்தால் உடன்படுகின்றேன்.

.................................................
வெட்டுமரச் சாலை உரிமையாளரின் கையொப்பம்.

திகதி :...................

**பி. குறிப்பு** : இவ்விண்ணப்பத்தை இரு பிரதிகளில் இடப்பரப்பின் பிரதேசக் காட்டு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஹங்வெல்ல மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்கள் தவிர்ந்த கொழும்பு மாவட்டத்தின் விண்ணப்பங்கள் பிராந்திய பிரதிக் காடு பேணல், இல. 60, அக்குரகொட வீதி, பெலவத்த, தலங்கம தெற்கு என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். ஹங்வெல மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்களின் விண்ணப்பங்கள் களுத்துறையிலுள்ள பிரதேசக் காட்டு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை IV**

(ஒழுங்குவிதி 4)

*(451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச்சட்டம்*

***வெட்டுமரச் சாலையின் பதிவுச் சான்றிதழ் (பிரிவு 23ஆ)***
***காடு பேணல் திணைக்களம்***

மாவட்டம்: .......................... பதிவில.: ...........................

1. வெட்டுமரச்சாலையின் பெயர்: ..................................................................
2. வெட்டுமரச்சாலையின் முகவரி: ...............................................................
3. வெட்டுமரச்சாலை உரிமையாளரின் விபரங்கள்: ..............................................................
   i. முழுப்பெயர்: ......................................................................
   ii. நிரந்தர முகவரி: .................................................
   iii. தேசிய அடையாள அட்டை இல. ...............................
4. வெட்டுமரச்சாலையின் தன்மை: .....................................................
5. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில்:
   i. கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம்: ......................................................................
   ii. இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம்: .................................................
   iii. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படக்கூடிய பிரதேச செயலாளர் பிரிவு: ...............................
6. வெட்டுமரச்சாலைக்குக் குறித்தளிக்கப்பட்ட ஆதனக் குறி: .....................................................

......................................
காடுபேணுநர் தலைமையதிபதி/பிரதிக் காடு பேணுநர்/
பிரதேசக் காட்டு அலுவலர்.

திகதி: .......................................

................................................................ காட்டு அலுவலகம்,

...............................................

வெட்டுமரச்சாலையின் தன்மையை மாற்றவேண்டியிருக்கும்போது அல்லது வேறேதேனும் கருமத்துக்காக, பதிவுச் சான்றிதழை வழங்கிய அலுவலருக்குத் தாமதமெதுவுமின்றி வேண்டுகோள் விடுக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை V**

*(451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச்சட்டம்*

*வெட்டுமரச் சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் (பிரிவு 23ஆ)*

மாவட்டம்: .......................... பதிவிலக்கம்: .............................

காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவின் கீழ் மேலேயுள்ள பதிவிலக்கத்தைக் கொண்ட காடு பேணல் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள வெட்டுமரச்சாலை என்றும், காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் கட்டளைகளின்படி, அந்த வெட்டுமரச்சாலையின் பதிவு முன்னதாகவே இல்லாதாக்கப்பட்டாலன்றி, ..................... லிருந்து ........................... வரை கீழே குறிப்பிடப்பட்டவாறு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. வெட்டுமரச்சாலையின் பெயர்: ..........................................................................................................
2. வெட்டுமரச்சாலையின் முகவரி: .......................................................................................................
3. வெட்டுமரச்சாலை உரிமையாளரின் முழுப்பெயரும் முகவரியும்: ..........................................................
   i. முழுப்பெயர்: ........................................................................................................................
   ii. நிரந்தர முகவரி: ......................................................................................................
   iii. தேசிய அடையாள அட்டை இல.: ..........................................................................................

4. வெட்டுமரச்சாலையின் தன்மை: ......................................................
5. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில்:
   i. கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம்: .......................................................................
   ii. இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம்: .................................................
   iii. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படக்கூடிய பிரதேச செயலாளர் பிரிவு: ................................
6. வெட்டுமரச்சாலைக்குக் குறித்தளிக்கப்பட்ட ஆதனக் குறி: ......................................................

........................................
காடுபேணுநர் தலைமையதிபதி/பிரதிக் காடு பேணுநர்/
பிரதேசக் காட்டு அலுவலர்.

திகதி: ........................................

................................................................. காட்டு அலுவலகம்,

...............................................

வெட்டுமரச்சாலை உரிமையாளர் அல்லது அவரது முகவர் (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுதலாகாது.

அட்டவணை VI

(ஒழுங்குவிதிகள் 5, 12 மற்றும் 14)

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| வெட்டுமரச்சாலையின் தன்மை | பதிவுக் கட்டணம் ரூபா | அனுமதிப்பத்திரத்துக்கும் அதன் புதுப்பித்தலுக்குமான வருடாந்தக் கட்டணம் ரூபா |
| 1. அரிவு ஆலை | 5000 | 5000 |
| 2. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை | 5000 | 5000 |
| 3. வெட்டுமர விற்பனை நிலையம் | 3000 | 3000 |
| 4. வெட்டுமரம் பக்குவப்படுத்துதல் மற்றும் பதனிடுதல் - தொழிற்சாலை | 5000 | 5000 |
| 5. தச்சுவேலை வேலைக்களம் | 750 | 750 |
| 6. மரத்தளபாடக் கடை | 500 | 500 |
| 7. விறகுக் காலை | 150 | 150 |

## **அட்டவணை** VII

*(ஒழுங்குவிதி 9)*

| *திகதி* | *தொடக்கக் கையிருப்பு (மரக்குற்றிகள்)* | | | *பெறப்பட்ட மரக்குற்றியின் கையிருப்பு* | | | *மரக்குற்றிகளின் மூலம்* | *விற்பனை செய்யப்பட்ட மரக்குற்றிகளின் கையிருப்பு* | | | *மூடு கையிருப்பு (மரக்குற்றிகள்)* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *இனம்* | *தொகை பரிமாணம்* $dm^3$ $ft^3$ | *மரக் குற்றி களின் எண் ணிக்கை* | *இனம்* | *தொகை* $dm^3$ $ft^3$ | *மரக் குற்றி களின் எண் ணிக்கை* | | *இனம்* | *தொகை* $dm^3$ $ft^3$ | *மரக் குற்றி களின் எண் ணிக்கை* | *இனம்* | *தொகை* $dm^3$ $ft^3$ | *மரக் குற்றி களின் எண் ணிக்கை* |
| | | | | | | | | | | | | | |

## **அட்டவணை** VIII

*(ஒழுங்குவிதி 9)*

| *திகதி* | *தொடக்கக் கையிருப்பு* | | *பெறப்பட்ட அரியப்பட்ட வெட்டுமரம்* | | | | | *விற்பனை செய்யப்பட்ட அரியப்பட்ட மரம்* | | *மீதிக் கையிருப்பு* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *வெளியிலிருந்து* | | *மரக்குற்றிகளின் மூலம்* | *அரிதல் மூலம் மாற்றுதல்* | | | | | |
| | *இனம்* | *தொகை* $dm^3/ft^3$ | *இனம்* | *தொகை* $dm^3/ft^3$ | | *இனம்* | *தொகை* $dm^3/ft^3$ | *இனம்* | *தொகை* $dm^3/ft^3$ | *இனம்* | *தொகை* $dm^3/ft^3$ |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

அட்டவணை IX

(ஒழுங்குவிதி 16)

(451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச்சட்டம்

வெட்டுமரச் சாலையை மூடுவதற்கான அறிவித்தல்

1. வெட்டுமரச்சாலை உரிமையாளரின் முழுப்பெயர்:

...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................

நிரந்தர முகவரி :

...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................

2. வெட்டுமரச்சாலையின் பெயரும் முகவரியும்:

...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................

பதிவிலக்கம்: ...........................................................................................................................................................

4. வெட்டுமரச்சாலையின் தன்மை: ....................................................................................................................

அ. .........................................................................................................................................
ஆ. .........................................................................................................................................
இ. .........................................................................................................................................
ஈ. .........................................................................................................................................
உ. .........................................................................................................................................

5. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையாகவிருப்பின் கையுழவுயந்திரத்தினதும் இழுவையிணைப்பு வண்டியினதும் பதிவிலக்கம்:
.........................................................................................................................................................

6. பதிவுசெய்யப்பட்ட பிரதேச செயலாளரின் பிரிவு: ..........................................................................................
.........................................................................................................................................................

7. வெட்டுமரச்சாலையை மூடுவதற்கு விண்ணப்பிக்கும் காலப்பகுதி: .......................... இலிருந்து .......................... வரை

8. மூடுவதற்கான காரணமும் விண்ணப்பத்திகதியும்: ...........................................................................................
.........................................................................................................................................................

9. மூடுகைக்கு அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதி: ......................................................... இலிருந்து ............................வரை

அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணங்களைச் செலுத்தாமல் மேலேயுள்ள காலப்பகுதியின் போது உமது வெட்டுமரச்சாலையை மூடுவதற்கு உமக்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது. நீர் மீண்டும் வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்கு விரும்பும்போது வெட்டுமரச்சாலையை மீளத் திறக்கும் திகதிக்கு முப்பது நாட்களுக்கு முன்னர், இந்த அறிவித்தலின் பிரதியுடன் சேர்த்து, பதிவுச் சான்றிதழை வழங்கிய அலுவலருக்கு எழுத்தில் பதிவுத் தபால் மூலம் அறிவிப்பதன் மூலம் அத்தகைய நோக்கத்துக்காக நீர் அனுமதிப்பத்திரமொன்றைப் பெறுதல் வேண்டும்.

.................................................................................
காடு பேணுநர் தலைமையதிபதி/பிரதிக் காடு பேணுநர்/பிரதேசக் காட்டு அலுவலர்.

வழங்குகைத் திகதி: .......................

அட்டவணை X

(ஒழுங்குவிதி 17)

(451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச்சட்டம்

காடு பேணல் திணைக்களம்

அரியப்படவுள்ள வெட்டுமரம் ஒரு தனியார் காணியிலிருந்து பெறப்பட்டதென்ற நிகழ்வை உறுதிப்படுத்தி நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையிலிருந்து வெட்டுமரத்தை அரிவதற்கு விரும்புகின்ற ஆளொருவருக்கு எல்லைக் காட்டு அலுவலரினால்/பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

1. விண்ணப்பகாரரின் பெயர்: ..........................................................................................................................................

2. முகவரி:..........................................................................................................................................

3. காணியின் பெயர்:..........................................................................................................................................

4. (i) எல்லை ......................................................................
(ii) காவல் கட்டு ..............................................................
(iii) காட்டு வெளி உதவியாளர் ..........................................

5. பிரதேச செயலாளர் பிரிவு/கிராம சேவகர் பிரிவு ..........................................................................................
6. உறுதி/அளிப்பு/வர்த்தமானி/அனுமதிப்பத்திர இலக்கமும் பதிவுத் திகதியும் ..............................................................
..........................................................................................................................................

7. (i) வரைபட இலக்கம் ..........................................................................................................................
(ii) காணித்துண்டு இக்கம் ..........................................................................................................................

8. வெட்டுமரத்தின் விவரணம் :

| மரங்களின்/மரக் குற்றிகளின் எண்ணிக்கை | இனம் | வெட்டுமரத்தின் அளவீடுகள் (m/cm) | | |
|---|---|---|---|---|
| | | அகலம் உயரம் சுற்றளவு | மத்தியிலான சுற்றளவு | நீளம் |
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |

9. மரங்களின்/மரக்குற்றிகளின் எண்ணிக்கை ..........................................................................................................

10. அலுவலரின் சம்மட்டிக் குறி ..........................................................................................................

11. மேலேயுள்ள வெட்டுமரம் (மரங்கள்/மரக்குற்றிகள்) மேற்குறிப்பிடப்பட்ட தனியார் காணியில் அமைந்துள்ளனவென்றும் ................. இலிருந்து ........................... வரையான ............................... நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையைப் பயன்படுத்தி அக்குறிப்பிட்ட காணியினுள் அவ்வெட்டுமரத்தை அரிவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

எல்லைக் காட்டு அலுவலர்/பிரதேச செயலாளர்

20 ........................................ ஆந் திகதி.
........................................................ இன் அலுவலகம்.

பிரதி - காவல் கட்டு காட்டு அலுவலர்/கிராம சேவை அலுவலர் . .............................................

12-613

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.